**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 52 of 2022

Deposition of D.W. 1

Name of the Witness: திரு. காதர் பாஷா (எ) காதர்அலி

Date :04.06.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் படித்துள்ளேனா என்றால் இல்லை, கையெழுத்து மட்டும் போடுவேன். 2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது மகனாவார். என் மகன் என்ன தொழில் செய்கிறார் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவது பொய் என்றும், என் மகன் வக்கீல் தொழில் செய்து வருகிறார் என்றால், அவர் வழக்கறிஞராக படித்துள்ளார், ஆனால் வழக்கறிஞர் தொழில் செய்யிவல்லை. வாதி என் மீது சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தை யார் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது என்றால், அதற்கான சங்கதிகளை நான் கூறினேன். வாதியை எனக்கு சிறு வயது முதலே தெரியும், ஒரே ஊரை சேர்ந்தவர்கள். வாதியும், அவருடன் சேர்ந்து முத்தாலாசெட்டி என்பவரும் ஆடு, மாடு வியாபாரம் செய்தார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் புளி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். வாதியும், மேற்படி முத்தாலாசெட்டியும், எனது தகப்பானாரும் 50 வருட பழக்கம் என்றால் சரிதான். பட்டா எண் 514, சர்வே எண் 434/1A என்ற சொத்தை எனது தகப்பனார் முத்தாலாசெட்டிக்கு குத்தகைக்கு விட்டிருந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பானார் மேற்படி முத்தலாசெட்டிக்கு குத்தகைக்கு விட்டிருந்தார் என்றும், அவர் குத்தகையை சரி வர தராததால், எனது தந்தை மேற்படி அவரது

நிலத்தை வாதிக்கு வருட குத்தகை ரூபாய் 5 ஆயிரம் என்ற வகையில் குத்தகைக்கு விட்டிருந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2004ல் இறந்தார். அவரது இறப்பிற்கு பிறகு வருடத்திற்கு ரூபாய் 5 ஆயிரம் பத்தாது என்றும் ரூபாய் 10 ஆயிரம் பணம் வேண்டும் என்று நான் வாதியிடம் கேட்டதால், அதற்கு வாதி அதற்கு ஒப்பு கொண்டு வாதி ரூபாய் 10ஆயிரம் கொடுத்து வந்தார் என்றால் அவர் பணமும் கொடுக்கவில்லை, நான் வாங்கியதும் இல்லை. நான் கூறுவது பொய் என்றும், அவர் வருடா வருடம் பணம் கொடுத்த பொழுது நான் ரசீது வழங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு நான் ரசீது கொடுக்காததால் தமிழ்நாடு விவசாய நிலவார சாகுபடி பதிவு சட்டத்தின் படி பதிவு செய்து கொடுக்க மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அது குறித்து வாதி எனக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார். வாதி எனக்கு ஒரு சட்ட அறிவிப்பு 03.12.2013ல் அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அதன் அலுவலக நகல் **வா.சா.ஆ.13** ஆகும். வாதி பென்னாகரம் வட்டாட்சியருக்கு கொடுத்த விண்ணப்பம் சம்பந்தமாக 18.12.2013ல் ஆஜராக சொல்லி எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரியல்ல. நான் அந்த விசாரணைக்கு ஆஜராகாமல் தொடர்ந்து வாதிக்கு தொல்லை கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி பென்னாகரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 43/2014 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் அழைப்பாணை பெற்று கொண்டு நான் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒரு தலைபட்ச தீர்ப்பானது கடந்த 11.03.2015ல் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டது என்றால் அதை பற்றி

எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பின் நகல் இந்த வழக்கில் வா.சா.ஆ.*11* ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இரண்டு முறை இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மருத்துவ செலவிற்காக அவ்வப்போது வாதியிடமிருந்து பணம் பெற்று கொள்வேன் என்றால் சரியல்ல.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)*

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.